செய்தி வெளியீடு எண்.50 நாள்: 13.01.2022

**விழுப்புரம் மாவட்டத்தில் சமூகநலத்துறையின் சார்பாக திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் திட்டத்தின்கீழ் 2,403 பயனாளிகளுக்கு ரூ.8,78,75,000/- மதிப்பீட்டில் திருமண நிதியுதவியும், தாலிக்கு தலா 8 கிராம் தங்கம் வீதம் ரூ.8,65,08,000/- மதிப்பீட்டிலான 19.224 கிலோ கிராம் தங்க நாணயங்கள் என மொத்தம் ரூ.17,43,83,000/- மதிப்பீட்டில் தாலிக்கு தங்கம் மற்றம் திருமண நிதியுதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தகவல்.**

விழுப்புரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூகநலத்துறையின் சார்பாக திருமண நிதியுதவி மற்றும் தாலிக்கு தங்கம் திட்டத்தின்கீழ், காணை, கண்டமங்கலம், கோலியனூர் மற்றும் விக்கிரவாண்டி பகுதியினைச் சேர்ந்த பகுதியினை சேர்ந்த **பட்டம்/பட்டயம் படித்த 15 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 5 பயனாளிகள் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு** தாலிக்கு தங்கம் மற்றம் திருமண நிதியுதவியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.நா.புகழேந்தி, மயிலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ச.சிவக்குமார் ஆகியோர் முன்னிலையில் இன்று (13.01.2022) பயனாளிகளுக்கு வழங்கி திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

**மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.**

தமிழ்நாட்டில் புதுமைப்பெண்களை படைத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடும், பெண்ணடிமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற காலத்தினை மாற்றிட வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் மூவலூர் இராமாமிர்தம் நினைவாக 1989-ஆம் ஆண்டு இத்திருமண நிதியுதவி திட்டம் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில் 8-ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்கு இத்திருமண நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும், பெண்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இத்திட்டம் படிப்படியாக தற்போது 10/12-ஆம் வகுப்பு மற்றும் பட்டம்/பட்டயம் படிப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கிராமப்புற பெண்களின் கல்வித் தரத்தினை உயர்த்திடும் நோக்கில், பெண்களுக்கு இலவச கல்வி மற்றும் இலவச பேருந்து பயண வசதி உள்ளிட்ட பல திட்டங்களை அறிமுகப்படுத்தினார். மாண்புமிகு கலைஞர் அவர்கள் பத்தாம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு மட்டுமே இலவச பேருந்து பயண வசதி திட்டத்தினை அறிவித்தார், அப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பட்டப்படிப்பு வரை இலவச பேருந்து வசதி அளித்திட வேண்டும் என அறிவுறுத்தியதன் அடிப்படையில் இலவச பேருந்து பயண திட்டம் பட்டப்படிப்பு வரை அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு கலைஞர் அவர்கள் வகுத்த நல்வழியில் செயல்பட்டு நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் பயன்பெறும் வகையில் மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணம், சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், அதன் அடுத்த நிகழ்வாக இன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 96 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 117 பயனாளிகள் என மொத்தம் 213 பயனாளிகளுக்கும், காணை பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த படித்த 51 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 117 பயனாளிகள் என மொத்தம் 228 பயனாளிகளுக்கும், கண்டமங்கலம் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 68 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 76 பயனாளிகள் என மொத்தம் 144 பயனாளிகளுக்கும், கோலியனூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 160 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 121 பயனாளிகள் என மொத்தம் 281 பயனாளிகளுக்கும், மயிலம் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 70 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 68 பயனாளிகள் என மொத்தம் 138 பயனாளிகளுக்கும், மரக்காணம் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 99 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 115 பயனாளிகள் என மொத்தம் 214 பயனாளிகளுக்கும், மேல்மலையனூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 68 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 83 பயனாளிகள் என மொத்தம் 151 பயனாளிகளுக்கும், முகையூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 117 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 126 பயனாளிகள் என மொத்தம் 243 பயனாளிகளுக்கும், ஒலக்கூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 79 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 84 பயனாளிகள் என மொத்தம் 163 பயனாளிகளுக்கும், திருவெண்ணெய்நல்லூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 84 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 116 பயனாளிகள் என மொத்தம் 200 பயனாளிகளுக்கும், வல்லம் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 64 பயனாளிகள்

மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 84 பயனாளிகள் என மொத்தம் 148 பயனாளிகளுக்கும், வானூர் பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 94 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 103 பயனாளிகள் என மொத்தம் 197 பயனாளிகளுக்கும், விக்கிரவாண்டி பகுதியினை சேர்ந்த பட்டம்/பட்டயம் படித்த 62 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 81 பயனாளிகள் என மொத்தம் 143 பயனாளிகள் என மொத்தம் **2,403 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் திருமண நிதியுதவி** வழங்கப்பட்டவுள்ளது.

அதன் தொடக்கமாக இன்று காணை, கண்டமங்கலம், கோலியனூர் மற்றும் விக்கிரவாண்டி பகுதியினைச் சேர்ந்த பகுதியினை சேர்ந்த **பட்டம்/பட்டயம் படித்த 15 பயனாளிகள் மற்றும் 10/12-ஆம் வகுப்பு படித்த 5 பயனாளிகள் என மொத்தம் 20 பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி வழங்கி** திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

திருமண நிதியுதவி திட்டத்தின்கீழ் பயன்பெறுவர்கள் இத்திட்டத்தினை சிறந்த முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக்கொள்ளவும், தங்களை முன்மாதிரியாக கொண்டு பெண் பிள்ளைகள் தொடர்ந்து கல்வி பயின்று அரசின் அனைத்து திட்டங்களையும் பெற்று பயனடைய வேண்டும் என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.ம.ஜெயச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராஜசேகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் துணைத் தலைவர் திருமதி.சே.ஷீலா தேவி சேரன், நகராட்சி ஆணையர் திரு.போ.வி.சுரேந்திரஷா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.